Deposition of Witnesses

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court of the Magalir Neethimandram( Mahila Court) Coimbatore

Present: Tmt. J. Rathika,M.A.,M.L.,

S.C.No.71/2018

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS NO.13

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | NAME | Dr.Gajendiran | 6 | CALLING | |
| 2 | FATHER'S NAME | | 7 | CASTE | |
| 3 | VILLAGE | | 8 | RELIGION | |
| 4 | TALUK | | 9 | AGE | |
| 5 | DISTRICT | | 10 | | |

Solemnly affirmed in accordance with the Provision of Act for 1873

12.02.2020

**முதல் விசாரணை**

நான் தற்போது சூலூர் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 12.02.2014 மாலை 04.45 மணியளவில் நான் கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், அவசர சிகிச்சை பிரிவில் பணி மருத்துவராக பணியிலிருந்த போது, நதியா, 23 வயது, த/பெ.ராமசாமி மற்றும் நதியாவின் கணவர் தாமோதரன், வயது-29, த/பெ.முத்துசாமி ஆகிய இருவரும் மஞ்சள் கலர் சாணிப் பவுடரை 12.02.2014 அன்று மாலை 03.50 மணியளவில் கஞ்சிக்கோணாம்பாளையம், பைபாஸ் ரோடு அருகில், மேற்படி மருந்தை குடித்து விட்டதாக என்னிடம் சிகிச்சைக்கு அழைத்து வரப்பட்டார்கள். அவர்களை பரிசோதனை செய்து, சிகிச்சை அளித்தேன். மேலும் அவர்களை மேல் சிகிச்சைக்காக உள் நோயாளிகளாக அனுமதித்தேன். நான் வழங்கிய விபத்துப் பதிவேட்டு நகல்கள் அ.த.சா.ஆ.7 மற்றும் அ.த.சா.ஆ.8 ஆகும்.

**குறுக்குவிசாரணை-** -இல்லை-

Deposition of Witnesses

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court of the Magalir Neethimandram( Mahila Court) Coimbatore

Present: Tmt. J. Rathika,M.A.,M.L.,

S.C.No.71/2018

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS NO.14

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | NAME | S.Gunasekaran | 6 | CALLING | |
| 2 | FATHER'S NAME | | 7 | CASTE | |
| 3 | VILLAGE | | 8 | RELIGION | |
| 4 | TALUK | | 9 | AGE | |
| 5 | DISTRICT | | 10 | | |

Solemnly affirmed in accordance with the Provision of Act for 1873

12.02.2020

**முதல் விசாரணை**

நான் மாவட்ட வருவாய் அலுவலராக சென்னை மாநகராட்சி, மண்டல அலுவலராக பணியாற்றி, 31.08.2018 அன்று ஓய்வு பெற்று, மதுரையில் குடியிருக்கிறேன். நான் கோயமுத்தூர், வருவாய் கோட்டாட்சியராக பணியாற்றிய காலத்தில் 30.03.2014-ம் தேதி, போத்தனூர் காவல் நிலையக் குற்ற எண்.230/2014 முதல் தகவல் அறிக்கையினைப் பெற்று, அதில் குறிப்பிடப்பட்டிருந்த நதியா என்பவரின் இறப்பு தொடர்பாக கோயமுத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரேதத்தை சவக் கிடங்கின் முன்பாக வைத்து, பிரேத விசாரணை செய்தேன். இறந்து போன நதியாவின் உறவினர்கள் பாலகிருஷ்ணன், ஆறுச்சாமி, மைதிலி, சரஸ்வதி மற்றும் அவரது கணவர் தாமோதரன், அவரது மாமனார் முத்துசாமி, மாமியார் சுப்பாத்தாள் மற்றும் பஞ்சாயத்தார்களை விசாரித்தேன். எனது விசாரணையில் இருந்து நதியாவின் இறப்பானது சந்தேகத்திற்கிடமான மரணமாக உள்ளதால், காவல்துறையினர் விசாரணை செய்து, முடிவு எடுக்க பரிந்துரை செய்தேன். என்னடைய விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.9 ஆகும்.

**குறுக்குவிசாரணை–**

நான் இறந்து போன நதியாவின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் தனியாகவும், கணவர் குடும்பத்தினரை தனியாகவும், அக்கம், பக்கத்தில் இருக்கும் நபர்களை பஞ்சாயத்தார்களாகவும் விசாரித்திருக்கிறேன் என்றால், அனைவரையும் ஒரே நாளில்தான்

தனித்தனியாக விசாரித்தேன். இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டவர்கள், இருவரும் வெவ்வேறு ஜாதியைச் சார்ந்தவர்கள் என்றால் சரி. இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டவர்கள் என்பதனால், நதியாவின் தாய் வழி குடும்பத்தினர் என் விசாரணையில் நதியாவுடன் எந்த தொடர்பும் வைத்துக் கொள்ளவில்லை என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரி. கணவரும், மாமியாரும், மாமனாரும் நதியா மனநல சிகிச்சை எடுத்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரி. அக்கம், பக்கத்தில் உள்ள பஞ்சாயத்தார்கள் அவர்கள் இருவரும் சந்தோஷமாக இருந்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரி. பஞ்சாயத்தார்கள் சாட்சியத்தில், கணவர் வீட்டு துன்புறுத்தலாலோ, வரதட்சணை கொடுமையாலோ இந்த இறப்பு நடக்கவில்லை என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரி. நானே இதைப் பொறுத்து முடிவு எடுக்காமல், சந்தேகத்திற்கான கூறுகள் இல்லாத நிலையில் காவல்துறை விசாரணைக்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. அனைத்து சாட்சிகளும் சொன்ன சாட்சியங்களில் சந்தேகத்திற்கான அனைத்து காரணங்களும் இருந்தது. நான் சொன்னவாறு எந்த காரணங்களும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை-** -இல்லை-